ISSN : 2456-821X

புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed

UGC CARE LIST

UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India

Volume : 07, Issue : 01/04 - March 2023

======================================================================

# யாப்பியல் நோக்கில் அப்பர் தேவாரம்

======================================================================

**ஆய்வாளர்**

***இரா. சண்முகப்பிரியா,*** *எம்.ஏ., எம்.ஃபில்.,* ***(Ph.D., Ref.No.40411)***
***முனைவர் பட்ட ஆய்வாளர்**, **தமிழாய்வுத்துறை**,*
***தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி*** *(**தன்னாட்சி**)*
***திருச்சி*** *- 620 023*
*(**பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது**).*

**நெறியாளர்**

***முனைவர் ப. வெங்கடேசன்***
***இணைப்பேராசிரியர்**, **தமிழாய்வுத்துறை***
***தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி*** *(**தன்னாட்சி**),*
***திருச்சி*** *- 620 023*
*(**பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது**).*

======================================================================

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழ் மொழி எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களை உடையது. அதில் நான்காவது இலக்கணமாக அமைந்த யாப்பு,செய்யுள் இயற்றுவதற்குரிய இலக்கணத்தைக் கூறுவதாகும். யாப்பு வடிவங்கள் காலந்தோறும் சிற்சில மாற்றங்களைப் பெற்று வந்துள்ளன. தொல்காப்பியர் செய்யுளியலில் பா வகைகளை மட்டும் குறிப்பிடுகின்றார். பிற்கால யாப்பிலக்கண நூல்கள் பாவினங்களாகிய துறை, தாழிசை, விருத்தம் ஆகியவற்றிற்கும் இலக்கணம் வகுத்துள்ளன. தமிழிலக்கியத்தில் அமைந்துள்ள செய்யுள் வடிவிலான நூல்களில் பெரும்பான்மையாக விளங்குபவை பக்தி இலக்கியங்களே ஆகும். பக்தி இலக்கிய ஆசிரியர்கள் தங்கள் படைப்புகளில் தொல்காப்பிய அடிப்படையிலும் பிற்கால யாப்பிலக்கண வளர்ச்சிக்கேற்பவும் பலவிதமான பா வகைகளையும், பாவினங்களையும் கையாண்டுள்ளனர். அவ்வகையில் அப்பரின் தேவாரப் பாடல்களில் அமைந்துள்ள பா, பாவினங்களின் அமைப்பு நிலைகளை ஆய்வு செய்வதாக இவ்வாய்வு மேற்கொள்ளப் பெற்றுள்ளது.*

*முன்னுரை*

*தமிழின் யாப்பிலக்கணம் என்பது காலந்தோறும் மாறியும், வளர்ந்தும் வந்துள்ளது. மரபுக் கவிதைகளைப் படைப்பதற்கு யாப்பிலக்கணமே துணைபுரிகின்றது. மரபுக் கவிதைகளைப் படைப்பதோடு மட்டுமின்றி, பண்டைக் காலந்தொட்டு யாப்பியலின் அடிப்படையில் உருவான பாடல்களின் அமைப்பினையும் பொருளினையும் அறிந்து கொள்வதற்கு யாப்பிலக்கணமே கருவியாக உள்ளது. அவிநயனார், காக்கைப் பாடினியார், நத்தத்தனனார், பல்காயனார், பல்காப்பியனார், மயேச்சுரனார் முதலிய பழம்பெரும் புலவர்கள் இயற்றிய யாப்பிலக்கண நூல்கள் நமக்கு இப்பொழுது கிடைக்கப் பெறவில்லை. யாப்பிற்கென்று இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ள நூல்கள் தொல்காப்பியச் செய்யுளியல், அமுத சாகரர் என்பவரால் இயற்றப் பெற்ற யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை போன்றவையாம்.*

*திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் திருப்பதிகங்கள் இயற்றிய காலத்தில் வழக்கிலிருந்த இலக்கண நூல் தொல்காப்பியமே ஆகும். தொல்காப்பியத்தில் தனிப்பாக்களாக ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பனவும் கலப்புப் பாடல்களாக மருட்பா, பரிபாடல் என்பனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. பா இனங்களாகிய தாழிசை, துறை, விருத்தம் ஆகியவற்றைக் குறித்துத் தொல்காப்பியர் கூறவில்லை. இக்காலத்தில் யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை ஆகிய இவ்விரு நூல்களை அடிப்படையாகக் கொண்டு, மூவர் தேவாரமாகிய இயல் இசைப் பாடல்களின் யாப்பமைதியினைப்பிற்காலச் சான்றோர் பகுத்துக் கூறியுள்ளனர். இதன் அடிப்படையிலேயே நாம் அப்பர் அருளிய தேவாரப் பாடல்களின் யாப்பமைதியினை விரிவாகக் காணலாம்.*

***யாப்பிலக்கணம் :***

*தொல்காப்பியம், பொருளதிகாரத்தின் ஒரு பகுதியாக 'செய்யுளியல்' எனும் ஓர் இயலில் மட்டுமே யாப்பிலக்கணம் பற்றிக் குறிப்பிடுகின்றது.*

***"மாத்திரை யெழுத்தியல் அசைவகை எனாஅ***
***யாத்த சீரே அடியாப் பெனாஅ" (செ.நூ.310)***

*எனத் தொடங்கும் நூற்பாவின் வழி மாத்திரை, எழுத்தியல், அசை, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவியல், திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள் வகை, துறை, மாட்டு, வண்ணம், ஆகிய இருபத்தாறு உறுப்புகளை ஒரு தொகுதியாகவும், அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைவு ஆகிய வனப்புகள் எட்டினை மற்றொரு தொகுதியாகவும் குறிப்பிட்டு மொத்தம் முப்பத்து நான்கு செய்யுள் உறுப்புகளின் இலக்கணத்தைத் தொல்காப்பியச் செய்யுளியல் விளக்குகின்றது.*

*அக்கால யாப்பிலக்கண விரிவினைக் காட்டுவதற்காகவே, தொல்காப்பியத்தில் அமைந்துள்ள 27 இயல்களுள் அளவில் பெரியதாக செய்யுளியல் அமைந்துள்ளது என்பர். மேலும் செய்யுளியலை ஒரு இயலாக மட்டும் கருதாமல் தனி ஒரு அதிகாரமாகவே கருதும் வழக்கம் பிற்கால ஆசிரியர்களிடம் இருந்துள்ளது என்பதனை,*

***"மற்றிதனை யாப்பதிகாரம் என வேறோர் அதிகாரமாக்கி***
***உரைப்பாரும் உளர்"***

*என்னும் பேராசிரியரின் உரை வழியாக அறிய முடிகின்றது. செய்யுளியலானது யாப்பதிகாரம் என்னும் ஒரு தனி அதிகாரமாகவே எண்ணப் பெற்றுள்ள நிலையினையே இறையனார் களவியலின் பாயிர உரையும் காட்டுகின்றது.*

***"ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை***
***நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே***
***கேட்போர் பயனோ டாயெண் பொருளும்***
***வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே"***

*என்னும் சிறப்புப் பாயிரத்திற்கு உரை கூறுமிடத்து,*

*இனி, யாப்பு என்பது – நூல் யாப்பு, நூல் யாக்குமிடத்து நான்கு வகையில் யாக்கப்படும்; தொகுத்தும், விரித்தும், தொகை விரியாகவும், மொழிபெயர்த்தும் என என்று யாப்பினைத் தனியதிகாரமாகவே இறையனார் களவியல் குறிப்பிடுகின்றது.*

*தொல்காப்பியர் ‘முந்துநூல் கண்டு’,‘புலந்தொகுத்து’ இலக்கணத்தைச் செய்தார் என்று சிறப்புப் பாயிரம் குறிப்பிடுகின்றது. ‘முந்து நூல்களில்’ யாப்பு நூல்களும் அடங்குமெனக் கொண்டால், முந்தைய யாப்பிலக்கணங்களைத் தொகுத்தும் தொல்காப்பியர் நூல் செய்துள்ளமையைத் தொல்காப்பியத்தின் பல நூற்பாக்கள் புலப்படுத்துகின்றன. தொல்காப்பியம் செய்யுளியலில்,*

***“நல்லிசைப் புலவர்***
***வாய்மொழிப் புலவர்***
***யாப்பறி புலவர்***
***நூல் நவில் புலவர்***
***உயர் மொழிப் புலவர்***
***தொன்னெறிப் புலவர்***
***புலன் உணர்ந்தோர் எனச் சிறப்பாகவும்,***
***என்ப, என்மனார் புலவர், மொழிப”***

*எனப் பொதுவாகவும், முந்தைய யாப்பிலக்கண ஆசிரியர்களைச் சுட்டி, அவர்கள் கூறியனவாக யாப்பிலக்கணச் செய்திகள் பலவற்றைக் குறிப்பிட்டுச் செல்வதன் மூலம் தொல்காப்பியத்திற்கு முன்னரே யாப்பிலக்கண நூல்கள் இருந்தமையை அறிந்து கொள்ள முடிகின்றது.*

***“எழுத்து முதலா ஈண்டிய அடியிற்***
***குறித்த பொருளை முடிய நாட்டல்***
***யாப்பென மொழிப யாப்பறி புலவர்”***

*எழுத்து, அசை, சீர், அடி என்னும் அமைப்பில் குறித்த பொருள் நிறையுமாறு சொற்களை அமைத்தல் யாப்பு எனப்படும். என்றும் அந்த யாப்புறுப்பு பாட்டு, உரை,நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என எழு வகைப்படும் என்றும் தொல்காப்பியம் கூறுகின்றது.*

***“பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே***
***அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்”***

*இவற்றுள் பாட்டு மட்டுமே அடிவரையறை உடையதென்றும் பிற ஆறும் அடிவரை இறல்லனவென்றும் கூறுவதோடு, அவ்வாறின் இலக்கணத்தையும் கூறுகன்றது.*

***‘’எழுநிலத் தொழுந்த செய்யுள் தெரியின்***
***அடிவரை யில்லன ஆறென மொழிப”***

*செய்யுளியல் உறுப்புக்களுள் ஒன்றின் பெயரான ‘யாப்பு’ என்பது பிற்காலத்தில் பா வடிவங்களின் புற இலக்கணம் அனைத்தையும் குறிக்கும் பொதுப் பெயராக மாற்றம் பெற்றுள்ளது.*

*யாப்பாவது :- பாட்டியாப்பு, உரையாப்பு, நூலியாப்பு, மொழியாப்பு, பிசியாப்பு, அங்கதயாப்பு, பழமொழியாப்பு என எழு வகைப்படும் என்று இளம்பூரணர் உரை கூறுகின்றார். செய்யுளியலில் செய்யுளின் வடிவம் குறித்தும் பொருண்மை குறித்தும் செய்திகள் இடம் பெற்றுள்ளன. செய்யுளியல் கூறும் செய்யுள் உறுப்புக்களுள் எழுத்து, அசை, சீர், அடி, தூக்கு, தொடை, பா. அளவியல் என்னும் வடிவம் சார்ந்த உறுப்புகளின் இலக்கணமே பிற்காலத்தில் யாப்பிலக்கணம் என உருப்பெற்றுள்ளது. வண்ணமும் வனப்பும் பிற்கால யாப்பிலக்கணத்துள் சுருக்கமாகவே சுட்டப்பெறுகின்றன. தொல்காப்பியம் கூறிய எழுவகைச் செய்யுள்களுள் அடிவரையறையுடைய பாட்டின் இலக்கணத்தையே பிற்கால யாப்பிலக்கண நூல்கள் பேசுகின்றன.*

*தொல்காப்பியத்தில் பா, இனம் எனும் பகுப்பும் இலக்கணமும் கூறப்படவில்லை. எனினும் இளம்பூரணர் தொல்காப்பியம் குறிப்பிடும் பண்ணத்தியின் இலக்கணத்தில் பாவினங்களை அடக்கிக் காட்டுகின்றார்(செ.நூ.172-174). பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் 'கொச்சக ஒருபோகு' இலக்கணத்துள் பாவினங்களை அடக்கிக் காட்டுகின்றனர்.*

*பரிபாடல், உறழ்கலி வடிவங்கள் பிற்கால யாப்பிலக்கண நூல்களில் இடம் பெறாதது போலவே 'பண்ணத்தி' வடிவமும் இடம் பெறவில்லை. வடிவம் சார்ந்த உறுப்புக்களின் அடிப்படையில் பிற்காலத்தில் யாப்பிலக்கண நூல்கள் தோன்றின என்பர்.*

***பாவினங்களின் வளர்ச்சி***

*கி.பி. ஏழாம் நுர்ற்றாண்டு முதல் பாவினங்கள் கிளைவிடத் தொடங்கின என்பர். ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலிப்பா, எனச் சொல்லப்பட்ட நான்கு பாக்களோடு தாழிசை, துறை, விருத்தம் என்னும் மூவினமும் உறழ, தாழிசையாவது; ஆசிரியத் தாழிசை, வஞ்சித் தாழிசை, வெண்டாழிசை, கலித்தாழிசை என்றும், துறையாவது; ஆசிரியத்துறை, வஞ்சித்துறை, வெண்டுறை, கலித்துறை என்றும், விருத்தமாவது; ஆசிரிய விருத்தம், வஞ்சி விருத்தம், வெளிவிருத்தம், கலிவிருத்தம் என்றும் மொத்தம் பன்னிரண்டாகும்.*

***"அடிநிமிர் கிளவி ஈரா றாகும்***
***அடியிகந்து வரினுங் கடிவரை யின்றே" (செ.நூ.172)***

*இப்பாவினங்களுக்கு எல்லாம் ஒரு வழிகாட்டியாகச் சங்ககால மரபிலிருந்து விலகிப் புதிய பாவின வகைகளுக்கு அடிகோலியவர் அப்பர் ஆவார். இடைக்காலப் பெருங்காப்பியங்களாகிய சிந்தாமணி, இராமகாதை, பெரிய புராணம் ஆகியவற்றில் பயிலும் விருத்த வகைகளுக்கும், காரிகை நடையாகிய கலித்துறைக்கும் வழிகாட்டியவர் அப்பர் என்பர். அப்பர் இப்புதிய இலக்கியப் பாவின வடிவங்களைப் பின்வருமாறு தொகுத்துக் கூறுகின்றார்.*

***"உளங்கொள் திரு விருத்தங்கள்***
***ஓங்குதிருக் குறுந்தொ கைகள்***
***களங் கொள்திரு நேரிசைகள்***
***பலபாடிக் கை தொழுது"***[1]

*இவர் பாடிய திருவிருத்தம் பிற்கால யாப்பருங்கல ஆசிரியர் காட்டும் கட்டளைக் கலித்துறைக்கு வழிகாட்டியாகும். இவ்வாறு பாவினத்தின் தந்தையாகத் அப்பர்; திகழ்ந்துள்ளார்.*

***அப்பர் தேவாரத்தின் யாப்பமைதி***

*பன்னிரு திருமுறைகளில் நான்கு, ஐந்து, ஆறு ஆகிய மூன்று திருமுறைகள் அப்பரால் பாடப் பெற்றவை. அப்பரின் திருப்பதிகங்கள் பெரும்பான்மையும் பத்துத் திருப்பாடல்களைக் கொண்டவையாக உள்ளன. பத்தாவது பாடலில் இராவணனுக்கு அருள்புரிந்த செய்தியினைக் குறிப்பிடுகின்றார். முற்பிறவியில் இராவணனுக்கு இரங்கியமையால் இப்பிறவி தமக்கு வாய்த்தது என்ற எண்ணத்தில் பதிகந் தோறும் பத்தாவது பாடலில் இராவணன் கயிலை மலையைப் பெயர்த்த வரலாற்றைக் குறிப்பிடுகின்றார்.*

*அப்பர் தேவாரத்தில் 58 பதிகங்கள் 'திருநேரிசை' எனவும், 34 பதிகங்கள் 'திருவிருத்தம்' எனவும், நூறு பதிகங்கள் 'திருக்குறுந்தொகை'எனவும், 99 பதிகங்கள் 'திருத்தாண்டகம்' எனவும் பெயர் பெறுகின்றன.*

*திருநேரிசை என்பன அறுசீர் ஆசிரிய விருத்தமாகவும்*
*திருவிருத்தம் என்பன கட்டளைக் கலித்துறையாகவும்*
*திருக்குறுந்தொகை என்பன கலிவிருத்தமாகவும்*
*திருத்தாண்டகம் என்பன எண்சீர் ஆசிரிய விருத்தமாகவும்*

*தற்கால யாப்பு முறையினை ஒட்டிக் கொள்ளத்தக்கன. எனினும் இவற்றிற்குத் தனிச் சிறப்பியல்பும் உண்டு என்பர்.*

***நான்காம் திருமுறையின் யாப்பமைதி***

*அப்பர்; தேவாரங்களில் ஒன்றாகிய நான்காம் திருமுறைப்பாக்கள் பல்வகைப் பாவினங்களால் ஆனது. யாப்பமைதியுடன் பண்கள் பொருந்தியும் பாடல்கள் அமைந்திருப்பது நான்காம் திருமுறையின் சிறப்புகளுள் ஒன்றாகும். நான்காம் திருமுறையில் உள்ள 113 பதிகங்களும் யாப்பு முறையில் ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கலித்துறை, கலித்தாழிசை, தரவு கொச்சகம், ஆசிரியத்துறைஆகிய பாவினப் பிரிவுகளாக அறியப்படுகின்றன.*

***ஆசிரிய விருத்தம்***

*அறுசீரடியாலும் அறுசீரின் மிக்க அடிகளாலும் அமைவன ஆசிரிய விருத்தங்கள் ஆகும். அறுசீரடியும் அறுசீரின் மிக்க அடிகளும் கழிநெடிலடிகள் ஆதலால் ஆசிரிய விருத்தங்கள்'கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்கள்' என்று குறிப்பிடப்படுகின்றன. காரிகைக்குப் பின்னர்த் தோன்றிய தொன்னூல் விளக்கம், செந்தமிழ், விருத்தப்பாவியல், கவிஞராக, கவிபாடலாம், யாப்புநூல், பாவலர் பண்ணை, எளிதாகப் பாடலாம் ஆகிய நூல்களே ஆசிரிய விருத்தங்களின் அமைப்பையும், வகைகளையும் விளக்கி இலக்கணம் கூறும் முயற்சியினை மேற்கொண்டுள்ளன.*

***"விருத்தம் கழிநெடில் நான்கு ஒத்து இறுவது" (யா.கா.நூ.29)***

*என்று யாப்பருங்கலக்காரிகை குறிப்பிடுகின்றது. கழிநெடிலடிகள் நான்கு சீரின் அளவில் ஒத்து முடிவது குறைபடுதல் இல்லாத சீர்களையுடைய அகவல் விருத்தமாகும். ஆசிரிய விருத்தமானது அறுசீர் விருத்தம் முதல் முப்பத்திரண்டு சீர் விருத்தம் வரையில் உண்டு. இருப்பினும் அறுசீர் முதல் எண்சீர் வரை பாடியுள்ள விருத்தங்கள் சிறப்புடையனவாகக் கருதப்படுகின்றன.*

*அப்பர் அறுசீர் ஆசிரிய விருத்தம், எண்சீர் ஆசிரிய விருத்தம் ஆகிய இரு வகைகளையும் பாடியுள்ளார். விருத்த வகைகளின் அமைப்புக்களை விளங்கிக் கொள்வதற்கு வாய்ப்பாக விருத்த வகைகளுக்கு இலக்கணம் கூறுவதற்கென்றே தனித்துத் தோன்றிய நூல் 'விருத்தப்பாவியல்' ஆகும். விருத்தப்பாவியல் காட்டும் வகைகளின் அடிப்படையிலும் அப்பர் தேவாரப் பாடல்களைக் காணலாம்.*

***அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் :***

*நான்காம் திருமுறையில் அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் அறுபத்தைந்து பதிகங்கள் (பதிக எண்.1,2,3,4,5,6,15,22,23-79) அப்பர் பாடப் பெற்றுள்ளன. அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் எழுவகை சீர் வாய்பாட்டு அமைப்புகளுக்கு 'விருத்தப்பாவியல்' இலக்கணம் கூறுகின்றது. அவை*

*1)* ***"சீர்விள மாச்சீர் தேமாச்***
***சீரிணைந் திரட்டு மீங்கே"***

*இவ்விருத்தத்தில் விளச்சீர், மாச்சீர், தேமாச்சீர் ஆகிய இம்மூன்று சீரும் கூடிப் பின்னும் ஒருகால் வருகின்றன. அதாவது, விளம் மா தேமா விளம் மா தேமா என்று வருகின்றன. சான்றாக,*

***"பத்தனாய்ப் பாட மாட்டேன் பரமனே பரம யோகீ***
***எத்தினாற் பத்தி செய்கே னென்னைநீ யிகழ வேண்டா***
***முத்தனே முதல்வா தில்லை யம்பலத் தாடு கின்ற***
***அத்தாவுன் னாடல் காண்பா னடியனேன் வந்த வாறே"***

*இப்பாடலில் விளம் மா தேமா விளம் மா தேமா என்னும் 'விருத்தப்பாவியல்;' வாய்பாடு பொருந்திப் போகின்றது.*

*2)* ***"இருமா காய்ச்சீர் ரரையடிக்கா***
***யிவையே மற்றை யரையடிக்கும்***

***வருமா றுணர்க”***

*இரண்டு மாச்சீரும் ஒரு காய்ச்சீரும் இரண்டு முறை வரும் என்று குறிப்பிடுகின்றது.*

***“பற்றற் றார்சேர் பழம்பதியைப்***
***பாசூர் நிலாய பவளத்தைச்***
***சிற்றம் பலத்தெந் திகழ்கனியைத்***
***தீண்டற் கரிய திருவுருவை***
***வெற்றி யூரில் விரிசுடரை***
***விமலர் கோனைத் திரைசூழ்ந்த***
***ஒற்றி யூரெ முத்தமனை***
***யுள்ளத் துள்ளே வைத்தேனே”***

*என்னும் செய்யுள் மா, மா, காய், மா மா காய் என்னும் வாய்ப்பாட்டுக்குச் சான்றாகும் இப்பாடல்*

***3) “முதனான்குங் காயாகிப் பின்னவைமா***
***தேமாவாய் முடியு மன்றே”***

*முதல் நான்கு சீரும் காய்ச்சீராகவும் கடையிரண்டு மாச்சீர் தேமாச்சீராகவும் வரும். ஐந்தாவது சீர் தேமா அல்லது புளிமாவாகவும், ஆறாவது சீர் தேமாவாகவே வரும். அப்பர் அருளிய திருவாரூர் - பழமொழி, திருக்கழிப்பாலை ஆகிய பதிகங்கள் இதற்குச்சான்றுகள் ஆகும்.*

***“வனபவள வாய்திறந்து வானவர்க்குந்***
***தானவனே யென்கின் நானாற்***
***சினபவளத் திண்டோன்மேற் சேர்ந்திலங்கு***
***வெண்ணீற்ற னென்கின் றாளால்***
***அனபவள மேகலையொ டப்பா லைக்***
***கப்பாலா னென்கின் றாளால்***
***கனபவளந் சிந்துங் கழிப்பாலைச்***
***சேர்பானைக் கண்டாள் கொல்லோ”***

*காய் காய் காய் காய் மா தேமா என்னும் சீர்வாய்ப்பாடு இப்பாடலோடு பொருந்துகின்றது.*

***4) “குறிய வீற்றுமாக் கூவிள முவ்விளங்***
***காயொடுங் குறிக்கொள்ளே”***

*சிறிய இறுதியையுடைய மாச்சீரொன்றும், கூவிளச்சீரொன்றும் விளச்சீர் மூன்றும், காய்ச்சீரொன்றும் வரும். அதாவது குறியஈற்றுமா கூவிளம் விளம் விளம் விளம் காய் என்று வரும்.*

***5) “ஒன்று மூன்றுட னாறு***
***மாவிளம் பிறவிட முறுமே”***

*ஒன்று, மூன்று, ஆறு ஆகிய மூன்று இடங்களில் மாச்சீரும், பிற இடங்களில் விளச்சீரும் வரும்.*

***“ஊழி யளக்கவல் லாறு***
***முகப்பவ ருச்சியுள் ளானும்”***

*என்னும் இவ்வடிகளில் ஒன்று மூன்று ஆறு ஆகியசீர்கள் மாச்சீர்களாகவும், மற்றவை விளச்சீர்களாகவும் வருகின்றன. மா விளம் மா விளம் விளம் மா ஆகியவை சீர்வாய்பாட்டு முறையில் வருகின்றன.*

***6) “கடையது மாவிள மாச்சீர்***
***கலந்தது வெண்டளை யென்ப***
***துடையது பாதியி ரண்டு***
***மோவியப் பொற்கொடிப் பாவாய்”***

*மூன்றாம் சீரும், ஆறாம் சீரும் மாச்சீர்கள், பிறசீர்கள் விளச்சீரும், மாச்சீருமாக அமைந்து அவை வெண்டளையிற் புணரும் என்ப.*

**“பூண்டதொர் கேழ லெயிறும்**

**பொன்றிக ழாமை புரள”**

*இவ்வடியில் மூன்றாம் சீரும், ஆறாம் சீரும் மாச்சீராய் வரப் பிறசீர்கள் விளச்சீரும், மாச்சீருமாக அமைந்துள்ளன.*

*7)* ***“மாச்சீ ரைந்து காய தொன்று”***

*என்னும் விருத்தப்பாவியல் சீர்வாய்பாடானது ஐந்து மாச்சீரும், ஒரு காய்ச்சீரும் (மா மா மா மா மா காய்) வரும் என்று குறிப்பிடுகின்றது. இவையே அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்திற்கு விருத்தப்பாவியல் கூறும் வாய்பாடுகள் ஆகும்.*

**எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

*அப்பர் நான்காம் திருமுறையில் எண்சீர் ஆசிரிய விருத்தங்களாக இரு பதிகங்கள் (பதிக எண்.8, 14) பாடியுள்ளார். எண்சீர் விருத்தத்தில் நான்காம் சீரும், எட்டாம் சீரும் தேமாவாக வந்து சந்த இன்பம் கெடாமல் அமைகின்றன. இவ்வெண்சீர் விருத்தத்தினை இரண்டு அடிகளாக மடித்து எழுதுவதும் அச்சிடுவதும் மரபாகும். எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் மூவகை சீர்வாய்பாட்டு அமைப்புகளை விருத்தப்பாவியல் காட்டுகின்றது. அவை,*

***1. காயிரண்டு மாவொன்று தே மா வொன்று***

***கலந்தவடி யிரட்டுமதன் விகற்பங் காணே?***

*காய்ச்சீர் இரண்டும், மாச்சீர் ஒன்றும், தேமாச்சீர் ஒன்றும் புணர்ந்திரட்டும் என்றும் (காய் மா தேமா காய் காய் மா தேமா), அதன் விகற்பங்களையும் கண்டு கொள்க என்று இப்பாடல் குறிப்பிடுகின்றது.*

***வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி***

***மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி***

***ஊற்றாகி உள்ளே ஒளிந்தாய் போற்றி***

***ஓவாத சத்தத் தொலியே போற்றி***

***ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி***

***ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி***

***காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி***

***கயிலை மலையானே போற்றி போற்றி***

இப்பாடலில் காய் காய் மா தேமா காய் காய் மா தேமா என்னும் வாய்ப்பாடு பொருந்துவது மட்டுமன்றி, முதல் மூன்று சீரும் வெண்டளையில் வந்துள்ளது.

*2.இதில் மூன்றாம் சீர் மாவேயன்றி காயும் வருகின்றது.*

***நான் காஞ்சீர் தேமாவே யன்றிப் புளிமாவும் வருகின்றது.*** [10]

*என்று முதல் வகை வாய்பாட்டிற்கு உரை கூறுமிடத்து மற்றொரு வகை சீர்வாய்;ப்பாட்டு முறையினையும் குறிப்பிடுகின்றது. அதாவது, காய் காய் காய் மா காய் காய் காய் மா என்று வருமென்கின்றது.*

***நாடகமா டிடநந்தி கேச்சுரமா காளேச்***

***சுரநாகேச் சுரநாக ளேச்சுரநன் கான***

*என்னும் இவ்வடிகளின் இரு அடிகளிலும் முதல் மூன்று சீர்கள் காய்ச்சீராகவும் இறுதிச் சீர்கள் மாச்சீர்களாகவும் வந்துள்ளன.*

*3.* ***ஆதி மாவொடுங் கூவிளம் விளமா***

***ஆகு மாயரை யடியிருங் குழலே*** [11]

*முற்கண்ணுள்ள குறிய மாச்சீரும் கூவிளமும், விளமும், மாச்சீரும் அரையடிவரும். மற்றை அரையடிக்கும் இதுவே விதியென்பதும் ஆகும். (மா கூவிளம் விளம் மா மா கூவிளம் விளம் மா)*

*இவ்வாறு எண்சீர்க்கழிநெடில் விருத்தங்கள் பல வகையாகிய விகற்பங்களுடன் வருவதனால், தமிழில், எண்சீர்க்கழிநெடிலடிகள் மாணவர்கள் எளிதில் பாடக்கூடிய பாக்களாயின. எண்சீர்க் கழிநெடிலான இவ்வகைகளில் சிலவற்றைப் பிளந்து கலி விருத்தங்களை இரட்டித்து எண்சீர்கழிநெடில் விருத்தங்களினை உண்டாக்குதலும் இயல்பே என்றும் விருத்தப்பாவியல் குறிப்பிடுகின்றது.*

***ஆசிரிய இணைக்குறட்டுறை***

*இடையில் பல அடிகள் சீர் குறைந்து குறளடியும், சிந்தடியுமாக வரும் ஆசிரியப்பா இணைக்குறள் ஆசிரியப்பா எனப்படும்.*

***காமருசீர் இடைபல குன்றின் இணைக்குறள். (யா.கா.நூ.28)***

*என்கிறது யாப்பருங்கலக்காரிகை. அப்பர் நான்காம் திருமுறையில் ஆசிரிய இணைக்குறட்டுறை யாப்பில் ஒரு பதிகம் (பதிகம் எண்.20) மட்டும் பாடியுள்ளார்.*

***காண்டலே கருத்தாய் நினைந்திருந்தேன் மனம்புகுந்***
***தாய் கழலடி***
***பூண்டுகொண் டொழிந்தேன்***
***புறம்போயினா லறையோ***
***ஈண்டுமாடங்க ணீண்டமா ளிகைமே லெழுகொடி***
***வானிளம் மதி***
***தீண்டிவந் துலவுந்***
***திருவாரூ ரம்மானே.***

***கலிவிருத்தம்***

*கலிப்பாவின் இனங்களாகக் கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம் ஆகிய மூன்றும் உள்ளன. இவற்றில் கலிப்பாவிற்குரிய துள்ளல் ஓசையின்றி நான்கு சீர்களைக் கொண்ட அளவடி நான்கால் அமைவது கலிவிருத்தம் ஆகும். விருத்தங்களில் கலிவிருத்தம் சிறப்புடையதாகக் கருதப்படுகின்றது.*

***நேரடி யீரிரண்டாய் விடினது வாகும் விருத்தம்; (யா.கா.நூ.33)***

*என்று கலிவிருத்தத்திற்கு யாப்பருங்கலக்காரிகை இலக்கணம் கூறுகின்றது. அப்பர் பாடிய நான்காம் திருமுறையில் ஐந்து பதிகங்கள் (பதிகம் எண்.10, 11, 16, 17, 18) கலிவிருத்தத்தில் அமையப் பெற்றுள்ளன. கலிவிருத்தத்திற்கு விருத்தப்பாவியல் பின்வருமாறு இலக்கணங் கூறுகின்றது.*

***1. காத லிக்குங்க விருத் தத்தொரு***
***பாத மாவருங் கூவிளம் பற்றிடி***
***னாத லானிரை நேர்க்கெழுத் தாறிரண்***
***டோதி னாரொரு பஃதுட னொன்றரோ.***[12]

*மாச்சீரோடு கூவிளம் புணருமானால் கவிகள் விரும்புகின்ற ஒருவித கலி விருத்தப்பாவாகும். ஆகையினால், நிரை முதலடிக்கும், நேர் முதலடிக்கும் எழுத்துப் பன்னிரண்டும், பதினொன்றும் புலவர் விதித்தார் என்று கூறுகின்றது.*

*இவ்விதிக்கு அப்பர் அருளிய,*

***எந்த மாதவஞ் செய்தனை நெஞ்சமே***
***பந்தம் வீடனவ யாய பராபரன்***
***அந்த மில்புக ழாரூ ரரனெறி***
***சிந்தை யுள்ளுஞ் சிரத்துளுந் தங்கவே.***

*என்னும் திருக்குறுந்தொகைப் பாடலை உதாரணமாகச் கொள்ளலாம். மா கூவிளம் கூவிளம் கூவிளம் என்று வந்துள்ளது.*

***2. முதலிரு சீர்விள மூன்று மாவினம்***
***பதமது கடையினிற் பசிய கூவிளம்***[13]

*முதலிரண்டு சீர்களும் விளச்சீராம், மூன்றாவது குறிய வீற்று மாச்சீராம், பாதத்தினாற் பசிய விளச்சீராம். விளம் விளம் மா கூவிளம் என்று அமையும் என்று குறிப்பிடுகின்றது. இதற்கு உதாரணமாக, அப்பரின் நமச்சிவாயத் திருப்பதிகப் பாடலான,*

**சொற்றுணை வேதியன் சோதி வானவன்**
**பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்**
**கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்**
**நற்றுணை யாவது நமச்சி வாயமே**

*என்னும் பாடலைக் கொள்ளலாம்.*

***பண்டமிழ் க்கவிப் பாக்கள் அனைத்தையுங்***
***கொண்டு கூறுதல் கூடுத லின்மையால்***
***வண்டு லாமது வார்குழல் வந்துழிக்***
***கண்டு கொள்வ தறிஞர்க டமையால்***

*என்னும் பாட்டிற்குப் பொருள் கூறுமிடத்து விருத்தப்பாவியல், பாவலரது இனிய தமிழ் விருத்தங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு இலக்கணம் கூறுதல் முடியாது என்பதனால் மேலும் பலவாறு வருவனவற்றையும் கொள்க எனக் குறிப்பிட்டுச் செலகின்றது.*

***கலித்துறை:***

*நான்காய் அளவொத்து வருவது கலித்துறையாகும். கலித்துறை பாக்கள் இடைக்கால இலக்கியங்களிலும், பிற்கால இலக்கியங்களிலும் பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளன. கலித்துறையைக் 'கலிநிலைத்துறை' என்றும் கூறுவர்.*

***நெடிலடி நான்காய் நிகழ்வது கலித்துறை (யா.கா.நூ.33)***

*என்று யாப்பருங்கலக்காரிகை கூறுகின்றது. பெரும்பாலும் தேமா, தேமா, கூவிளம், தேமா, காய்ச்சீர் பெற்றுவரும் அப்பர் கலித்துறையில் ஒரு பதிகம் (பதிகம் எண்.21) மட்டும் பாடியுள்ளார்.*

***முத்து விதான மணிப்பொற் கவரி முறையாலே***
***பத்தர் களோடு பாவையர் சூழப் பலிப்பின்னே***
***வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்***
***அத்த னாரூ ராதிரை நாளா லதுவண்ணம்.***

***கட்டளைக் கலித்துறை***

*ஐஞ்சீரடி நான்காய் அமைந்து ஒவ்வோர் அடியிலும் முதல் நான்கு சீர்களும் வெண்டளை பிழையாமல் இறுதிச்சீர் கூவிளங்காய் அல்லது கருவிளங்காய் என்று வாய்ப்பாடு பெற்று முதல்சீரின் முதலசை நேராக இருந்தால் ஓரடிக்குப் பதினாறு எழுத்துக்களையும், நிரையசையாக இருந்தால் பதினேழு எழுத்துக்களையும் பெற்று ஏகாரத்தில் முடிகின்ற யாப்பு முறையே கட்டளைக் கலித்துறை ஆகும்.*

*யாப்பருங்கலக் காரிகையில் இடம்பெற்றுள்ள பாடல்கள் அனைத்தும் கட்டளைக் கலித்துறைகளே ஆகும். இக்கட்டளைக் கலித்துறையில் முழுவதும் இயற்றுவதே கோவை நூல் ஆகும். கட்டளைக் கலித்துறை, கலிப்பாவின் இனத்தில் வருவதாகும். அப்பர் நான்காம் திருமுறையில் கட்டளைக் கலித்துறையில் பாடிய பதிகங்கள் முப்பத்து நான்கு (பதிகம் எண்.80,81-113) ஆகும்.*

***பாளை யுடைக்கமு கோங்கிப்பன்***
***மாடம் நெருங்கியெங்கும்***
***வாளை யுடைப்புனல் வந்தெறி***
***வாழ்வயற் றில்லைதன்னுள்***
***ஆள வுடைக்கழற் சிற்றம்***
***புலத்தரன் ஆடல்கண்டாற்***
***பீளை யுடைக்கண்க ளாற்பின்னைப்***
***பேய்த்தொண்டர் காண்பதென்னே.***

***தரவு கொச்சகம்***

*கலிப்பாவின் முதல் உறுப்பாகிய தரவு மட்டும் வருவது தரவு கொச்சக் கலிப்பா ஆகும். அத்தரவு தனிச்சொல், சுரிதகம் என்னும் உறுப்புகளின் துணைகொண்டு அமைவதும் உண்டு. கலிப்பா வகைகளுள் ஒன்றான கொச்சகக் கலிப்பாதரவு, தரவிணை, சில்தாழிசை, பல்தாழிசை, மயங்கிசை என ஐந்து வகைப்படும். அப்பர் நான்காம் திருமுறையில் தரவு கொச்சகப் பாவகையில் நான்கு பதிகங்கள் (பதிகம் எண்.7, 12, 13, 19) பாடியுள்ளார்.*

***கரவாடும் வன்னெஞ்சர்க்***
***கரியானைக் கரவார்பால்***
***விரவாடும் பெருமானை***
***விடையேறும் வித்தகனை***
***அரவாடச் சடைதாழ***
***வங்கையினி வனலேந்தி***
***இரவாடும் பெருமானை***
***யென்மனத்தே வைத்தேனே.***

***கலித் தாழிசை***

*இரண்டும், இரண்டுக்கும் மேற்பட்ட அடிகளைப் பெற்றும் ஈற்றடி மிகுந்தும் மற்றைய அடிகள் ஒத்தும் ஒவ்வாமலும் அமைவது கலித்தாழிசை ஆகும். இது தணித்து வருதலினும் ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வருவதே சிறப்புடையதாகும். அப்பர் கலித்தாழிசை யாப்பில் ஒரு பதிகம் மட்டும் (பதிகம் எண்.9) பாடியுள்ளார்.*

***தலையே நீவணங்காய் - தலை***
***மாலை தலைக்கணிந்து***
***தலையா லேபலி தேருந் தலைவனைத்***
***தலையே நீவணங்காய்.***

***ஐந்தாம் திருமுறையின் யாப்பமைதி***

*அப்பர் அருளிய ஐந்தாம் திருமுறையானது குறுந்தொகை என்றும் அழைக்கப்படுகிறது. ஐந்தாம் திருமுறை முழுவதும் 'கலிவிருத்த யாப்பினால்' அமையப் பெற்றமையால் "குறுந்தொகை" என்று பெயர் பெற்றுள்ளது.*

***ஆறாம் திருமுறையின் யாப்பமைதி***

*ஆறாம் திருமுறை முழுவதும் எண்சீhக்கழிநெடி ஆசிரிய விருத்தப் பாக்களைக் கொண்டதாக அப்பரால் எழுதப் பெற்றுள்ளது. "நெடுந்தாண்டகம்" என்ற சிறப்புப் பெயரும் இதற்கு உண்டு. எண்சீர் ஆசிரிய விருத்தப் பாக்களால் அமையப் பெற்றமையால் 'நெடுந்தாண்டகம்' எனப்பட்டது.*

***தொகுப்புரை :***

*அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் 65 பதிகங்கள், எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் 2 பதிகங்கள், ஆசிரிய இணைக்குறட்டுரையில் 1 பதிகம், கலிவிருத்தத்தில் 5 பதிகங்கள், கலித்துறையில் 1 பதிகம், கட்டளைக் கலித்துறையில் 34 பதிகங்கள், தரவு கொச்சகத்தில் 4 பதிகங்கள், கலித்தாழிசையில் 1 பதிகம் எனப் பல்வகையானப் பாவினங்களால் நான்காம் திருமுறையும், முழுவதும் கலிவிருத்த யாப்பினால் ஐந்தாம் திருமுறையும், எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பினால் ஆறாம் திருமுறை முழுமையும் அப்பரால் பாடப் பெற்றுள்ளது.*

***சான்றெண் விளக்கம்***


1. *பெரியபுராணம் பா.1607*
2. *விருத்தப்பாவியல் முதற்படலம் நூ.1*
3. *மேலது, நூ.2*

4. மேலது, நூ.3
5. மேலது, நூ.4
6. மேலது, நூ.5
7. மேலது, நூ.6
8. மேலது, நூ.7
9. மேலது, நான்காம் படலம். நூ.1
10. மேலது, நூ.1 உரை
11. மேலது, நூ.2
12. மேலது, ஐந்தாம் படலம். நூ.1
13. மேலது, நூ.2
14. மேலது, நூ.3

**துணைநின்ற நூல்கள்**


1. தமிழ் யாப்பிலக்கண தோற்றமும், வளர்ச்சியும் முதல்பாகம் - முதற்தொகுதி, சோ.ந.கந்தசாமி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
2. திருநாவுக்கரசர் தேவாரம் (நான்கு, ஐந்து, ஆறு – திருமுறைகள்) - ஞானசம்பந்தர் (ப.ஆ.) தருமை ஆதீனம், மயிலாடுதுறை, இரண்டாம் பதிப்பு 1997
3. தேவாரம் ஆய்வுத்துணை - தி.வே.கோபாலையர், இன்ஸ்டிடியூட் பிரான்ஸிஸ் ஆஃப் பாண்டிச்சேரி-1997.
4. தொல்காப்பியம், பொருளதிகாரம் - இளம்பூரணர் (ப.ஆ.)கழகம், சென்னை-18
5. தொல்காப்பியம் பொருளதிகாரம் பேராசிரியர் - கனக சபாபதி., (ப.ஆ.) சாது அச்சுக் கூடம், 1935.
6. பெரிய புராணம் (மூலமும், உரையும்) - அ.மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, நான்காம் பதிப்பு – 1999
7. யாப்பருங்கலக் காரிகை - குணசாகரர் (உ.ஆ.) டாக்டர். உ.வே.சா. நூல் நிலையம் வெளியீடு, சென்னை-1968.
8. விருத்தப்பாவியல் - தி.வீரபத்திர முதலியார். ஈ.என்.தனிகாசல முதலியார் (ப.ஆ.) கழகம், சென்னை, முதற்பதிப்பு - 1984